**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

## விலைமனு கோரல்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்**
**ஒப்பந்த இலக்கம் : DIE/PRO/05/2025/34**

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் தகைமையுள்ள சேவை வழங்குனர்களிடமிருந்து குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

2.

| | |
|---|---|
| 1. | பிரதான அலுவலகம், "சுஹுருபாயா", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை. |
| 2. | திருகோணமலை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 3. | கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 4. | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 5. | மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 6. | கண்டி பிராந்திய அலுவலகம். |
| 7. | வவுனியா பிராந்திய அலுவலகம். |
| 8. | குருணாகல் பிராந்திய அலுவலகம். |
| 9. | மாத்தறை பிராந்திய அலுவலகம். |
| 10. | மிரிஹான வெளிநாட்டவர் தடுப்பு நிலையம். |
| 11. | யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 12 | யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

4. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாயா", **5** ஆம் மாடி, **"B"** பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், விலைமனு ஆவணங்களை அதே முகவரியில் வைத்து 2025.05.20 முதல் 2025.06.09 ஆம் திகதி வரை மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை பரீட்சிக்கலாம்.

   தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.: 011-2101559 தொலைநகல்: 011-2879091

5. மீளளிக்கப்படாத ரூபா எட்டாயிரம் (ரூ. **8,000/-**) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாயா", **5** ஆம் மாடி, **"B"** பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம், **2025.05.20** ஆம் திகதி தொடக்கம் **2025.06.09** ஆம் திகதி வரை மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை,

அச்சிடப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் கொள்வனவு செய்ய முடியும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை, மூலப் பிரதி **(Original)**, இணைப் பிரதி **(Duplicate)** என இரு **(02)** பிரதிகளில் தயாரித்து **2025.06.11** ஆம் திகதி பி.ப. **2.00** மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், சுஹுருபாயா, **5** ஆம் மாடி, **"B"** பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் வந்து ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக் கோரல் முடிவடைந்த உடனே மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வருகைத்தருவதற்கு விருப்பம் தெரிவித்த விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

7. விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து **91** நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு விலைமனுக்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

8. எல்லா விலைமனுக்களும் விலைகூறல் ஆவணத்தில் பந்தி **3.3** இல் காட்டப்பட்டுள்ளவாறு விலைமனு காப்பீடொன்றுடன், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், விலைமனுக் காப்பீடானது ரூ.**420,000/-** பெறுமதியைக் கொண்டதும், **2025.10.09** ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்குகின்ற வர்த்தக வங்கியொன்றால் விநியோகிக்கப்பட்டதுமாக இருத்தல் வேண்டும்.

9. விலைகூறல் முன் சந்திப்பொன்று **2025.05.28** ஆம் திகதி பி.ப. **2.00** மணிக்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுறுபாயா", **5** ஆம் மாடியில் **"B"** பகுதியில் அமைந்துள்ள கொள்முதல் பிரிவில் நடைபெறும்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு**
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
"சுஹுறுபாயா",
ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.